**நவம்பர் – 21**

# TNPSC துளிகள்

- இந்திய வம்சாவளி சீக்கிய தன்னார்வலர் அமர் சிங் என்பவர் 2023 ஆம் ஆண்டுக்கான நியூ சவுத் வேல்ஸ் ஆஸ்திரேலியன் என்ற விருதினைப் பெற்றுள்ளார்.
  - அமர் சிங் 7 ஆண்டுகளுக்கு முன்பு ‘டர்பன்ஸ்4 ஆஸ்திரேலியா’ எனும் நிறுவனத்தை நிறுவினார்.
- கூகுள் 2022 போட்டிக்கான டூடுலின் வெற்றியாளரை கூகுள் நிறுவனம் அறிவித்தது.
  - கொல்கத்தாவைச் சேர்ந்த ஷ்லோக் முகர்ஜி, ‘இந்தியா ஆன் தி சென்டர் ஸ்டேஜ்’ என்ற ஊக்கமளிக்கும் டூடுலுக்காக இந்தியாவுக்கான வெற்றியாளராக அறிவிக்கப் பட்டுள்ளார்.
- பாரீஸ் நகரில் உள்ள சார்லஸ் டி கோல் விமான நிலையத்தில் 18 ஆண்டுகளாக வசித்து வந்த ஈரானிய அகதி மெஹ்ரான் கரிமி நாசேரி அதே விமான நிலையத்தில் காலம் ஆனார்.
  - அவரது கதை 2004 ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கின் திரைப்படமான "தி டெர்மினல்" ஐ உருவாக்கியது.
- 41வது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது புதுதில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் தொடங்கியது.
  - இந்த ஆண்டு வர்த்தகக் கண்காட்சியின் கருப்பொருள் “உள்ளூர்க்கான குரல், உள்ளூர் முதல் உலகம் வரை” என்பதாகும்.
- சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) தலைவராக நியூசிலாந்தின் கிரெக் பார்க்லே மேலும் இரண்டு ஆண்டு காலத்திற்கு ஒரு மனதாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- அமேசான் ஒரு டிரில்லியன் டாலர்கள் சந்தை மதிப்பை இழந்த உலகின் முதல் பொது நிறுவனமாக வரலாற்றில் உள்ளது.
  - இது அதிகரித்து வரும் பணவீக்கம், இறுக்கமான பணவியல் கொள்கைகள் மற்றும் ஏமாற்றமளிக்கும் வருவாய் வரவுகள் ஆகியவற்றின் ஒரு கலவையாகும்.
- நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த உயர்நீதிமன்றங்களின் அறிக்கையின்படி பதவியில் உள்ள மற்றும் முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்றவியல் வழக்குகள் மூன்று ஆண்டுகளில் 21% அதிகரித்து 2018 டிசம்பரில் 4,122 என்ற அளவிலிருந்து 2021 டிசம்பரில் 4,984 ஆக அதிகரித்துள்ளது.
  - பதவியில் உள்ளவர்கள் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் மகாராஷ்டிராவில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஆதார் விதிகள்


- ஆதார் விதிமுறைகளில் மத்திய அரசு திருத்தம் செய்துள்ளது.
- இது ஒவ்வொரு 10 வருடங்களுக்கும் ஒரு முறையாவது தங்கள் தகவல்களை ஆதரிக்கும் ஆவணங்களைப் புதுப்பிக்குமாறு ஆதார் அட்டையினை வைத்து இருப்பவர்களுக்கு அறிவுறுத்துகிறது.
- இதில் ஆவணங்களைப் புதுப்பிப்பது கட்டாயமில்லை, எனினும் அது ஊக்குவிக்கப் படுகிறது.

- மத்திய அடையாள தரவுக் களஞ்சியத்தில் தங்களின் தகவலின் தொடர்ச்சியான துல்லியத்தை உறுதிப்படுத்த பயனர்கள் தங்கள் ஆவணங்களைப் புதுப்பிக்கலாம்.




## 'சரியானதை உண்போம் நிலையம்' – போபால்

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைக் கழகம் (FSSAI) ஆனது போபால் ரயில் நிலையத்திற்கு ""பயணிகளுக்கு உயர்தர மற்றும் சத்தான உணவு" வழங்குவதற்காக 4 நட்சத்திர "சரியானதை உண்போம் நிலையம்" என்ற சான்றிதழை வழங்கியது.
- சண்டிகர் ரயில் நிலையம் ஐந்தாவது இந்திய ரயில் நிலையமாக 5 நட்சத்திர 'சரியானதை உண்போம் நிலையம்' என்ற சான்றிதழைப் பெற்றது.
- இந்த சான்றிதழைப் பெற்ற மற்ற ரயில் நிலையங்களில் டெல்லி ஆனந்த் விஹார் ரயில் நிலைய முனையம், மும்பை சத்ரபதி சிவாஜி முனையம், மும்பை மத்திய ரயில் நிலையம்; மற்றும் வதோதரா ரயில் நிலையம் ஆகியவை அடங்கும்.
- அனைத்து இந்தியர்களுக்கும் பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் நிலையான உணவை உறுதி செய்வதற்காக, நாட்டின் உணவு முறையை மாற்றியமைக்க, FSSAI அமைப்பின் பெரிய அளவிலான முயற்சியே 'ஈட் ரைட் இந்தியா' இயக்கம் ஆகும் .




## ஹைட்ரஜன் எரிபொருள் கொண்ட மின்கலனால் இயங்கும் இந்தியாவின் முதல் கட்டுமரம் வகையிலான கப்பல்

- கொச்சி கப்பல் கட்டும் நிறுவனமானது, உத்தரப் பிரதேச மாநிலத்தில் வாரணாசி


நகரத்தில் இயக்கச் செய்வதற்காக, ஹைட்ரஜன் எரிபொருள் கொண்ட மின்கலனால் இயங்கும் இந்தியாவின் முதல் கட்டுமரம் வகையிலான கப்பலை உருவாக்குவதற்காக இந்திய உள்நாட்டு நீர்வழிகள் ஆணையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளது.

- இது புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டைக் குறைப்பதற்கும், அதன் மூலம் இந்தியாவின் தேசிய நீர்வழிகளில் மேற்கொள்ளப்படும் மாசு உமிழ்வை மேலும் குறைப்பதற்கும் வழி வகுக்கும்.



# சர்வதேசச் செய்திகள்

## வட்டியில்லா வங்கி முறை



**Islamic Banking in Pakistan**

- **Islamic Banking**
  Means such a bank where all the financial, trade, business matters are done according to the Islamic Rules & Regulations and it is free from Interest.
- At the time of independence Muslims had thought to root out Riba (Interest) in financial matters in this Islamic State.
- **1947 to 1960:**
  No possible decision could be taken in this era to eliminate interest from the Banking World.
- **1960 to 1977:**
  In this era, the Council of Islamic Ideology (CII) put a lot of reports in front of Government to guide the Govt. that Interest is prohibited in Islam.
- **1977 to 1980:**
  the Council of Islamic Ideology (CII) and State Bank of Pakistan took some steps to remove interest from the economy. The steps are:
- ✓ In Feb, 1979 financial institutions which are (ICP, NIT, HBFC) were targeted for elimination of interest

- பாகிஸ்தான் அரசானது, இஸ்லாமியச் சட்டத்தின் கீழ் 2027 ஆம் ஆண்டு முதல் அந்த நாட்டில் வட்டியில்லா வங்கி முறையை அமல்படுத்த திட்டமிட்டுள்ளது.
- இது நெறிமுறை சார்ந்த தரநிலைகளின் அடிப்படையில் செயல்படுவதோடு அது முஸ்லிம்கள் எந்தவிதமான வட்டியையும் செலுத்துவதையோ அல்லது பெறுவதையோ தடுக்கிறது.
- இஸ்லாமியத்தின் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கான பயனுள்ளச் செயற் கருவியாக இது கருதப்படுகிறது.
- இருப்பினும், இவை ஷரியா சட்டங்களுக்கு இணங்கவில்லை என்றாலும், தற்போதுள்ள

சர்வதேச நிதிசார் உறுதிப்பாடுகளை நிறைவேற்றச் செய்வதற்கு பாகிஸ்தான் கடமைப் பட்டுள்ளது.

## சீ விஜில் 22 பயிற்சி





- இந்தியா முழுவதுமான கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியான 3வது 'சீ விஜில் 22' என்ற பயிற்சியினை இந்தியக் கடற்படை மேற்கொண்டது.
- சீ விஜில் என்பது 2018 ஆம் ஆண்டில் கருத்தாக்கம் செய்யப் பட்ட தேசிய அளவிலான ஒரு கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியாகும்.
- கடலோரக் காவல்படை மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பிற அமைச்சகங்களின் ஒருங்கிணைப்புடன் சேர்த்து இந்தியக் கடற்படையினால் இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.
- இந்தப் பயிற்சியானது '26/11' தாக்குதலைத் தொடர்ந்து, கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை உறுதிப்படுத்துகிறது.
- சீ விஜில் மற்றும் TROPEX ஆகிய இரண்டும் ஒருசேர, கடல்சார் பாதுகாப்பு சார்ந்த பல்வேறு சவால்கள் முழுவதையும் எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை உள்ளடக்கும்.
- போர்க்கள அளவிலான தயார்நிலை செயல்பாட்டுப் பயிற்சி (TROPEX) என்பது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஒரு இராணுவப் பயிற்சியாகும்.

## பார்கேன் நடவடிக்கை


- ஆப்பிரிக்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பார்கேன் எனப்படும் பத்தாண்டு கால இராணுவ நடவடிக்கை முடிவுக்கு வந்ததாக பிரான்ஸ் அறிவித்தது.
- பிரான்ஸ் அரசானது தனது இராணுவ நடவடிக்கைகளை 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சர்வல் நடவடிக்கை என்ற தலைப்பில் சஹேல் பகுதியில் தொடங்கியது.
- இது வடக்கு மாலி நாட்டின் பகுதியின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றிய அல்-கொய்தா அமைப்புடன் தொடர்புடைய இஸ்லாமிய தீவிரவாதிகளைக் குறிவைத்து தாக்குவதை

நோக்கமாகக் கொண்டது.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் வேளாண் ஏற்றுமதி 2021/22




- இந்த ஆண்டு இந்தியாவின் வேளாண் ஏற்றுமதி அளவானது 2021-22 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட 50 பில்லியன் டாலர் என்ற மதிப்பினைக் கடக்கும் வகையில் மேற் கொள்ளப் பட்டு வருகிறது.
- பெட்ரோலியம், மின்னணுப் பொருட்கள், தங்கம் மற்றும் நிலக்கரி ஆகியவற்றிற்குப் பிறகு, ஐந்தாவதாக தாவர எண்ணெய்களானவை தற்போது இந்தியாவில் அதிகளவில் இறக்குமதி செய்யப்படும் பொருளாக உள்ளன.

- குறைந்த உள்நாட்டு உற்பத்தி காரணமாக இந்தியா முதன்மையாக நிகரப் பருத்தி இறக்குமதியாளராக மாறியுள்ளது.
- மிளகு இறக்குமதியில், வியட்நாம், இலங்கை, இந்தோனேஷியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் இந்தியாவைப் பின்னுக்குத் தள்ளியுள்ள அதே சமயம், ஏலக்காய் உற்பத்தியில் குவாத்திமாலா அதிக சந்தைப் பங்கைப் பெற்றுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்திய உயிரியல் தரவு மையம்




- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் சமீபத்தில் இந்திய உயிரியல் தரவு மையத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- இது வாழ்க்கை அறிவியல் தரவுகளுக்கான இந்தியாவின் முதல் தேசிய அளவிலான களஞ்சியமாகும்.
- இது நாட்டில் அரசால் நிதியுதவி செய்யப்பட்ட ஆராய்ச்சியிலிருந்து உருவாக்கப்பட்ட அனைத்து வாழ்க்கை அறிவியல் தரவுகளையும் சேமிக்கும்.
- இது உயிரித் தொழில்நுட்பத் துறையின் (DBT) உதவியுடன் செயல்படுகிறது.
- இது ஹரியானாவின் ஃபரிதாபாத்தில் உள்ள உயிரித் தொழில்நுட்பப் பிராந்திய மையத்தில் நிறுவப்பட்டது.
- புவனேஷ்வரில் உள்ள தேசியத் தகவல் மையத்தில் (NIC) இதன் தரவு "பேரழிவு மீட்பு" தளம் உள்ளது.
- இது சுமார் 4 பெட்டாபைட் தரவுச் சேமிப்புத் திறன் கொண்டது.
- இது 'பிரம்' உயர் செயல்திறன் கம்ப்யூட்டிங் (HPC) வசதியை வழங்குகிறது.

## LOFTID திட்டம்

- நாசா அதன் தாழ்மட்ட புவிச் சுற்றுப்பாதையில் இயங்கும் ஒரு மிதவை வகையிலான வேக ஒடுக்கியின் (LOFTID) விமானச் சோதனைப் பணியின் தொழில்நுட்ப விளக்கத்தை நிறைவு செய்தது.
- இந்தக் கூம்பு வடிவ அமைப்பானது, இழுவை சக்திகளுக்கு எதிராக அதன் நிலையினைத் தக்க வைத்திருக்கக் கூடியத் திறன் கொண்ட ஒரு மிதவை

அமைப்பைக் கொண்டிருக்கும்.

- இது விண்கலங்கள் புவியில் மீண்டும் நுழையும் போது உருவாகும் அதிக வெப்பத்தில் இருந்து பாதுகாப்பதற்கான ஒரு பாதுகாப்பு நெகிழ்திறன் மிக்க வெப்பப் பாதுகாப்பு அமைப்பையும் கொண்டிருக்கும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## மின் கழிவு (மேலாண்மை) விதிகள் 2022

- அடுத்த ஆண்டு ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வரும் இது மின் கழிவுகளை உற்பத்தி செய்பவர்கள், தயாரிப்பாளர்கள், புதுப்பிப்பவர்கள், அகற்றுபவர்கள் மற்றும் மறு சுழற்சி செய்பவர்கள் என அனைவருக்கும் பொருந்தும்.
- உலகளாவிய மின்-கழிவு கண்காணிப்பு அறிக்கை 2020 என்பதின் படி, சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, இந்தியா உலகின் மூன்றாவது பெரிய மின்-கழிவு உற்பத்தியாளர் ஆகும்.
- மின்-கழிவு என்பது மின்னணு மற்றும் மின் சாதனங்களின் அனைத்துப் பொருட்களையும், அவற்றின் உரிமையாளரால் மறுபயன்பாட்டின் நோக்கமின்றி கழிவுகளாக நிராகரிக்கப்பட்ட பகுதிகளையும் குறிக்கிறது.
- மின்-கழிவு மேலாண்மை விதிகள் 2016 என்பதின் கீழ், மின் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கான விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பை ஒரு நிறுவனம் கடைபிடிப்பது கட்டாயமாகும்.
- இதில், விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புச் சான்றிதழ்கள் (கார்பன் கிரெடிட் பொறிமுறையைப் போன்றது) மூன்றாம் தரப்பினருக்கு மின்னணு கழிவுப் பொறுப்பை ஈடுகட்ட அனுமதிக்கும்.
- மின் மற்றும் மின்னணு உபகரணங்களை தயாரிப்பதில் அபாயகரமான பொருட்களை (ஈயம், பாதரசம் மற்றும் காட்மியம் போன்றவை) பயன்படுத்துவதை இது கட்டுப் படுத்துகிறது.
- இது மின்னணுப் பொருட்களின் உள்ளடக்கும் வரம்பை அதிகரிக்கிறது எ.கா., மடிக் கணினிகள், மொபைல், கேமராக்கள் போன்றவை.
- மின்னணுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டில்

முறையே 70% மற்றும் 80% ஆக அதிகரிப்பு இலக்குகளுடன் 2023 ஆம் ஆண்டுக்குள் குறைந்த பட்சம் 60% மின்னணு கழிவுகள் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சி செய்யப் படுவதை உறுதி செய்ய வேண்டும்.

- அவர்களின் இலக்கை அடையாத நிறுவனங்களால் 'சுற்றுச்சூழல் இழப்பீடு' வழங்கப் பட வேண்டும்.




## ஒப்பந்ததாரர் நாடுகளின் 14வது மாநாடு





- ஈரநிலங்கள் தொடர்பான ராம்சார் உடன்படிக்கையின் ஒப்பந்ததாரர் நாடுகளின் 14வது மாநாட்டினை (COP14) வூஹான் (சீனா) மற்றும் ஜெனிவா (சுவிட்சர்லாந்து) ஆகியவை இணைந்து நடத்தின.
- இந்த மாநாட்டின் போது, வூஹான் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப் பட்டதோடு ராம்சார் தளங்கள் பற்றிய அறிக்கையும் வெளியிடப்பட்டது.
- ராம்சார் தளங்கள் குறித்தப் பட்டியலில் 75 சதவீத ஈரநிலங்கள் பற்றியத் தகவல்கள் காலாவதியானவையாகும்.
- ராம்சார் உடன்படிக்கையின் ஒப்பந்ததார நாடுகள் தனது நாட்டிலுள்ள ராம்சார்

தளங்களுக்கான ராம்சார் தகவல் அறிக்கைகளை (RIS) குறைந்தது ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது புதுப்பிக்க வேண்டும்.

## மாறி வரும் நிலத்தடி நீர் ஆதாரங்கள் குறித்த மதிப்பீட்டு அறிக்கை-2022

- ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மத்திய நிலத்தடி நீர் வாரியத்தின் நிலத்தடி நீர் குறித்த மதிப்பீட்டு அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- மொத்த நிலத்தடி நீரில் 1/4 பங்குப் பண்பாட்டுடன் நிலத்தடி நீரை அதிகளவில் பயன்படுத்தும் நாடாக இந்தியா திகழ்கிறது.
- ஹரியானா, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் நிலத்தடி நீர் எடுப்பு மிக அதிகமாக உள்ளது.
- 87% நிலத்தடி நீர் ஆனது பாசனத்திற்குப் பயன்படுத்தப் படுகிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## குடிமக்கள் கருத்துணர்வு ஆய்வு

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றிய கருத்தை நேரடியாக பதிவு செய்ய குடிமக்கள் கருத்துணர்வு ஆய்வை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்திய தேசிய நகர்ப்புற விவகாரங்கள் மற்றும் தரக் குழுவால் மேற்கொள்ளப்படும்

- இது எளிதாக வாழ்வதற்கான குறியீட்டில் 30% மதிப்பைக் கொண்டுள்ளது.
- எளிதாக வாழ்வதற்கான குறியீடு மற்றும் நகராட்சி செயல்திறன் குறியீடு ஆகியவை வாழ்க்கைத் தரம் மற்றும் நகரத்தின் நகர்ப்புற வளர்ச்சிக்கான பல்வேறு முயற்சிகளின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் பயன்படுத்தப்படும் மதிப்பீட்டுக் கருவிகள் ஆகும்.




## சட்டத்தின் ஆட்சிக் குறியீடு 2022





- உலக நீதித் திட்ட அமைப்பானது இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக உலக நாடுகளில் சட்டத்தின் ஆட்சி குறைந்துள்ளது என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இதில் இந்தியா 77வது இடத்தில் (140 நாடுகளில்) உள்ளது.
- இந்தக் குறியீட்டில் டென்மார்க் முதலிடம் பிடித்தது.
- உலக நீதித் திட்டம் (WJP) என்பது "உலகெங்கிலும் உள்ள சட்டத்தின் ஆட்சியை மேம்படுத்துவதற்காக பணியாற்றும்" என்ற ஒரு குறிக்கோளுடன் செயல்படுகிற ஒரு

சர்வதேச உரிமையியல் சமூக அமைப்பாகும்.

## உலகளாவிய தடுப்பூசி விநியோகச் சந்தை அறிக்கை 2022

- உலகளாவிய தடுப்பூசி விநியோகச் சந்தைகளில் COVID-19 தடுப்பு மருந்தின் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக உலக சுகாதார அமைப்பானது இந்த அறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- இந்த அறிக்கையின்படி, தடுப்பூசி விநியோகமானது சில நாடுகள் மற்றும் ஒரு சில உற்பத்தியாளர்களால் மட்டுமே அதிக அளவில் மேற்கொள்ளப்படுகிறது.
- 10 உற்பத்தியாளர் நிறுவனங்கள் மட்டுமே 70% தடுப்பூசித் தவணைகளை வழங்குகின்றன (COVID தடுப்பூசி தவிர).
- மொத்த COVID தடுப்பூசித் தவணைகளில் ஆப்பிரிக்கா 3% மட்டுமே பெற்றுள்ளது.





# மாநிலச் செய்திகள்

## 9வது அட்டவணை மற்றும் ஜார்க்கண்ட்

- ஜார்க்கண்ட் அரசானது, அம்மாநில அரசுப் பணிகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்காக,வேலைவாய்ப்பிற்கான இடஒதுக்கீட்டை 77% ஆக உயர்த்துகின்ற ஒரு மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- எனவே, இது உச்ச நீதிமன்றத்தின் 50% இடஒதுக்கீடு என்ற ஆணையை (இந்திர சாவ்னி வழக்கு) மீறுகிறது.
- மேலும், நீதிப் புணராய்வினைத் தவிர்க்கச் செய்வதற்காக இந்த மசோதாவினை 9வது அட்டவணையில் சேர்க்குமாறு அந்த அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
- ஒன்பதாவது அட்டவணையானது (1வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் 31B

என்ற பிரிவு சேர்க்கப் பட்டது), நீதிமன்றங்களில் எதிர்த்து வழக்குப் பதிவு செய்ய முடியாத மத்திய மற்றும் மாநில அரசின் சட்டங்களை உள்ளடக்கியப் பட்டியலைக் கொண்டுள்ளது.

- ❖ தற்போது, இது போன்ற 284 சட்டங்கள் நீதிப் புணராய்வில் இருந்து பாதுகாக்கப் பட்டு உள்ளன.
- ❖ 31B என்ற பிரிவானது பின்னோக்கியச் சட்டங்களுக்குப் பயன்படுத்தப்படக் கூடியது.
- ❖ 31B என்ற சட்டப் பிரிவானது, நீதிப் புணராய்விலிருந்து விடுப்பட்டாலும், ஒன்பதாவது அட்டவணையின் கீழ் உள்ள சட்டங்கள் அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பை மீறுவதாக இருந்தால் (I R கோயல்ஹோ வழக்கு 2007) அவை நீதிப் புணராய்விற்கு உட் படுத்தப் படும்.
- ❖ எனவே, 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதிக்குப் பிறகு ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்ட எந்தச் சட்டத்தையும் எதிர்த்து வழக்குப் பதிவு செய்ய முடியும்.




## STREE திட்டம்




- ❖ கேரளச் சுற்றுலாத்துறையானது, இலண்டனில் நடைபெற்ற உலகச் சுற்றுப் பயணக் கண்காட்சியில், மதிப்பு மிக்க உலகளாவியப் பொறுப்புணர்வு மிக்க சுற்றுலாத் துறைக்கான விருதை வென்றுள்ளது.
- ❖ கேரள அரசின் பொறுப்புணர்வு மிக்க சுற்றுலாத் துறை என்ற இயக்கத்தினால் செயல்

படுத்தப் பட்ட STREE திட்டத்திற்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.

- STREE என்பது நிலையான, உறுதியான, பொறுப்புணர்வு மிக்க, அனுபவமிக்க, இனம் சார்ந்த மற்றும் சுற்றுலா மையங்கள் என்பதன் சுருக்கமாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சர் டேவிட் பட்லர்

- "நவீன தேர்தல் அறிவியலின் தந்தை" அல்லது சைஃபாலஜிஸ்ட் என்று அழைக்கப்படும் இவர், தனது 98வது வயதில் லண்டனில் காலமானார்.
- பட்லர் தேர்தல்கள் பற்றிய தனது ஆராய்ச்சிக்காக "தி கியூப் ரூல்" என்று அழைக்கப் படும் நீண்ட காலமாக மறக்கப்பட்ட எட்வர்டியன் சமன்பாட்டை உருவாக்கினார்.
- இதன் மூலம் வாக்குப்பதிவு எண்களில் இருந்து வெற்றி பெற்ற மொத்த இடங்களின் எண்ணிக்கையை கணிக்க முடிந்ததை அவர் கண்டுபிடித்தார்.
- 1955 ஆம் ஆண்டில், அவர் பிபிசியின் தேர்தல் இரவு ஒளிபரப்பில் ஸ்விங்கோமீட்டரை அறிமுகப்படுத்தினார்.
- இது உலகம் முழுவதும் தேர்தல் செய்தி வெளியீட்டின் பிரதான அம்சமாக மாறியது.




## பிஹாரி புரஸ்கார்





- பிரபல எழுத்தாளர்களான மது கன்காரியா (ஹம் யஹான் தி) மற்றும் டாக்டர் மாதவ் ஹடா (பச்ராங் சோலா பஹார் சாகி ரி) ஆகியோர் முறையே 31வது மற்றும் 32வது பிஹாரி புரஸ்கார் விருதுகளைப் பெற்றனர்.

- பிஹாரி புரஸ்கார் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ராஜஸ்தானி எழுத்தாளர் இந்தி அல்லது ராஜஸ்தானியில் கடந்த 10 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட ஒரு சிறந்தப் படைப்புக்காக வழங்கப் படுகிறது.
- பிஹாரி புரஸ்கார் 1991 ஆம் ஆண்டில் கே.கே.பிர்லா அறக்கட்டளையால் நிறுவப்பட்ட மூன்று இலக்கிய விருதுகளில் ஒன்றாகும்.

### சத்யஜித் ரே வாழ்நாள் சாதனையாளர் விருது 2022

- விருது பெற்ற ஸ்பானிய நாட்டுத் திரைப்பட இயக்குனரான கார்லோஸ் சௌராவுக்கு சத்யஜித் ரே வாழ்நாள் சாதனையாளர் விருதானது வழங்கப்பட உள்ளது.
- கோவாவின் பானாஜி நகரில் நடைபெற உள்ள 53வது இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவின் இந்த விருதானது வழங்கப்பட உள்ளது.




## விளையாட்டுச் செய்திகள்

### பெண்கள் உலக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் 2023




- 2023 ஆம் ஆண்டு புதுதில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் பெண்கள்

உலக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா நடத்தவுள்ளது.

- இது சர்வதேச குத்துச் சண்டை சங்கம் (IBA) நடத்தும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப் படும் அமெச்சூர் குத்துச்சண்டை போட்டியாகும்.
- ஆடவர் உலக சாம்பியன்ஷிப்பை இந்தியா இதுவரை நடத்தியதில்லை என்பது குறிப்பிடத் தக்கது.
- எனினும் புகழ்மிக்க பெண்களுக்கான ஒரு போட்டி இந்தியாவில் நடைபெறுவது இது மூன்றாவது முறையாகும்.
- முன்னதாக 2006 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் புதுதில்லியில் இது நடைபெற்றது.

## IBSA நாடுகளின் பார்வையற்றோர்களுக்கான மகளிர் ஆசிய/ஓசியானியா கால் பந்து சாம்பியன்ஷிப் போட்டி 2022




- கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான் கேரள மாநிலம் கொச்சியில் நடைபெறுகின்ற இந்த போட்டியினைத் தொடங்கி வைத்தார்.
- இது இந்தியாவின் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு மிகப்பெரிய கால்பந்து போட்டியாகத் திகழும்.
- இந்தப் போட்டியில் இந்தியா, சீனா, தாய்லாந்து, மலேசியா, கஜகஸ்தான், தென் கொரியா, ஜப்பான், ஈரான், ஆஸ்திரேலியா, உஸ்பெகிஸ்தான் ஆகிய 10 அணிகள் பங்கேற்கின்றன.
- ஒரு மாற்றுத் திறனாளிகளுக்கான கால்பந்து போட்டியில் 10 ஆடவர் அணிகள் மற்றும் 2 மகளிர் அணிகள் பங்கேற்பது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★